



# விடுகதைகள்

| | |
|---|---|
| உரிக்க உரிக்கத் தோல்<br>அது என்ன? |  |
| வெள்ளை மனிதனுக்கு<br>கறுப்புத் தொப்பி<br>அவன் யார்? |  |
| நாலு கால்கள் உண்டு<br>நடக்கத் தெரியாது.<br>நான் யார்? |  |
| உயர எறிந்தால்<br>தரையில் விழுவான்<br>தரையில் எறிந்தால்<br>உயர எழுவான்<br>அவன் யார்? |  |
| உள்ளே இருந்தால்<br>ஓடித் திரிவான்<br>வெளியே வந்தால்<br>விரைவில் மடிவான்<br>அவன் யார்? |  |

| | |
|---|---|
| மழையில் நனைவேன்<br>வெயிலில் காய்வேன்<br>வெளியில் விரிவேன்<br>வீட்டில் சுருங்குவேன்<br>நான் யார்? |  |
| தூய்மையானால் கறுப்பாவேன்<br>அழுக்கானால் வெள்ளையாவேன்<br>நான் யார்? |  |
| மேல் ஏறிச் செல்லும்;<br>விமானம் அல்ல.<br>தண்ணீர் உண்டு;<br>குளமும் அல்ல.<br>அது என்ன? |  |
| பல் இருக்கும்; கடிக்காது<br>அது என்ன? |  |
| இதயம் போல் துடிப்பிருக்கும்<br>இரவு பகல் விழித்திருக்கும்<br>அது என்ன? |  |

குறிப்பு:
- வயதுக்கேற்ற விடுகதைகளைக் கேட்டு மாணவர்கள் விடுவிக்க வழிநடத்துக.
- மாணவர்கள் விடுகதைகளைச் சேகரிக்கவும், அவற்றை வகுப்பில் கேட்கவும், விடுவிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக.
- விடுகதைகளை எழுதி வகுப்பறையிற் காட்சிப்படுத்துக.